
உ

சிவமயம்

# "பொன் மலர்"



## கருகம்பனை, கீரிமலை

## திரு.சுப்பிரமணியம் பொன்னுத்துரை

## அவர்களின் பிரிவு குறித்த நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 18 . 07 . 1927 |  | 27 . 08 . 2009 |

## திரு.சுப்பிரமணியம் பொன்னுத்துரை

### அவர்கள்

### திதி நிர்ணயம்

ஆண்டு விரோதி அழகுறு ஆவணி மாத
பூண்ட நற் பூர்வ பக்ஷ அஸ்டமியில்
புண்ணியவான் பொன்னுத்துரை வாழ்வு துறந்து
சர்வசிவன் பாதமலர் சேர்ந்த நாளாம்
பாரினில் புகழ் நாட்டி போதமுற்றார் என்றே புகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



*அன்பிற்கு இலக்கணமாய்*
*பாசத்தின் உறைவிடமாய்*
*எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*நற்குடும்ப நாயகனாய்*
*பிள்ளைகள் போற்றும் நற்தந்தையாய்*
*மருமக்கள் மெச்சும் நல் மாமனாராய்*
*பேரர்களுக்கு ஓர் ஆருயிர் பேரனாய்*
*சகோதரர்களுக்கு நற் சகோதரனாய்*
*மைத்துனர்க்கு அரிய மைத்துனராய்*
*பெறாமக்களுக்கோர் பெரிய-சிறிய தந்தையாய்*
*மருமக்களுக்கு ஓர் மாமனாராய்*
*ஊரவர்க்கு ஓர் உத்தமனாய்*
*தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டனாய்*
*வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்த*
*எம் குடுதம்பத் தலைவனின்*
*நீங்கா நினைவுகளை!*
*அகரணா! அகவிருளுய்ந்து*
*அங்கயற்கண்ணி ஈழத்துநாயகி பாதந்தழுவி*
*அகிலமெல்லாம் தமிழோசை முழங்க*
*அன்னை அடிபணியறிவால்*
*அவர்தம் பாதம் சமர்ப்பணம் - வாழீ!!*

மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
பந்தியில் வைத்தடி போற்று கின்றேன்

# தேவாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதோடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவென்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன
கண்டே னவர்திருப்பாதங் கண்டறியாதெனக் கண்டேன்.

# திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீரே
பூசுவதும் பேசுவதும் பூண்பதும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பாணான் சாழலோ.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யாரகள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

# பெரிய புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும்றவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்

# திருவாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்களின் வாழ்க்கை சுவடுகளில் .........

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்'**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்தவர் அமரர் திரு. சுப்பிரமணியம் பொன்னுத்துரை. நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். இவ்வினிய வார்த்தைக்கு இலக்கனமாய் வாழ்ந்து காட்டியவர் பொற்குணத்தார் பொன்னுத்துரை ஆவார்.

நீர்வளமும், நிலவளமும், மலைவளமும் சிறந்தோங்குவது எமது ஈழத்திருநாடு. இந்து சமுத்திரக் கடல் சூழ் இலங்காபுரியின் மகுடமாகத் திகழும் யாழ்ப்பாணத் திருநகரின் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமாயமைந்த, மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கேயமைந்த சரித்திரப் புகழ்வாய்ந்தது கீரிமலை. அதன் தென்பால் சகல வளங்களும் கொண்ட நிலமாகப் சிறப்பைப் பெற்ற கற்றோர்கள், வாணிபத்தோர், புராண வித்தகர்கள், நிறைமனம் கொண்டோர் வாழும் பனைவளமும் வெற்றிலை, முந்திரிகை பயிர்ச்செய்கைகள் அடங்கலான நிறைந்த வளமான புண்ணிய பூமியாம் கருகம்பனை என்னும் பதியினில் தண்டிகை கனகராய முதல் வழியிலும் மயிலை நரசிங்க தேவர் வழியிலும் உதிர்த்த இல்லறத்தில் நல்லறமாய் சீரும் சிறப்புமாக வாழ்ந்த சுப்பிரமணியம்-தங்கப்பிள்ளை தம்பதியினருக்கு 1927ம் ஆண்டு ஆடிமாதம் திங்கட்கிழமை 18ம் நாள் இரண்டாவது புத்திரனாக திரு. பொன்னுத்துரை அவர்கள் பிறந்தார். இவருக்கு கனகசபை என்ற ஒரு அண்ணனும், நவரத்தினம், குமரேசம்பிள்ளை என்ற இரு தம்பிமார்களும், புவனேஸ்வரி என்ற தங்கையும் உடன்பிறப்புக்கள் ஆவார்கள்.

இவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கல்விப்பருவம் எய்தியதும் துர் அதிஷ்டவசமாக தம் பெற்றோர்களை இழந்தார்கள். அதனால் குடும்பம் என்னும் சுமையை அக்கறையுடன் மனமுவர்ந்தேற்று தனது இளைய சகோதர, சகோதரியை முறைப்படி கவனித்து கல்விபயில வைத்து வையத்தில் வாழ்வாங்கு வாழ வைத்தார்.

தனது ஆரம்பக் கல்வியை இளவாலை மெய் கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தார். இவர் கணித பாடத்தில் அதிக ஆர்வம் காட்டினார். அந்தக் காலத்தில் "PREP" என்று சொல்லப்பட்ட 8ம் தராதரத்தை முறையே பயின்று சித்தியெய்தினார். தொடர்ந்தும் மேற்படிப்பிற்காக கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியில் படிப்பை தொடர சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் சிறு பராயத்தில் பெற்றோர்களை இழந்ததால் குடும்ப சுமை காரணமாக அவரால் படிப்பை தொடர முடியவில்லை. இருந்தும் பல சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்த ஆரம்பித்தார். பதினாலு வயதினிலே தன் தந்தையையும் இருபத்தொராவது வயதினிலே தன் தாயையும் இழந்தார். அதனால் தன் உடன் பிறப்புக்களோடு பாலும் தேனும் போல் வளர்ந்து அவர்களின் அன்பையும் பாசத்தையும் தேடிக் கொண்டார். குறிப்பாக தன் குடும்பத்தில் இளையவளும் ஒரே சகோதரியுமான புவனேஸ்வரி மீது அதிக பாசமும் பற்றும் கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் இவரது சகோதரர்களும் ஒன்று சேர்ந்து தமது நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் ஆரம்பித்தார்கள். குறிப்பாக வெற்றிலைச் செய்கையில் இவர்கள் கைதேர்ந்திருந்தார்கள். இவரை ஒரு 'நல்ல உழைப்பாளி' என்றும் 'காசுக்காரன்' என்றும் அழைப்பதுண்டு. இளம் பராயத்தில் இவர் பல சமூகப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தியிருந்தார். இவர் தெல்லிப்பளை கிராம சபை அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம முன்னேற்றத்திற்காக அரும்பெரும் பணியாற்றினார். அதேவேளை சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய தொண்டுகள் செய்தார். இந்துக் கோவில்களான கீரிமலை சிவன்கோவில், மாவை கந்தன்கோவில், கருகம்பனை வயிரவர் கோவில் எனப்பல புனிதஸ்தலங்களைத் தரிசித்து பல தொண்டுகளும் புரிந்தார். அதேசமயம் தமிழர் சுயாட்சி உணர்வாளனாக, தந்தை செல்வா தலைமையை ஏற்று தமிழரசு கட்சி கூட்டங்களிலும் அறப்போர்களிலும் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

இவரின் வாழ்க்கையை ஒளியேற்ற மனையாளை தேர்ந்தெடுக்க எண்ணங்கொண்ட பெரியோர்கள் 1960ம் ஆண்டு இவரது 33ம் வயதினில் இருபாலை மண்ணாடுகொண்ட முதலி வழிவந்த குலவீரசிங்க முதலியாரின் வழிதோன்றலாகிய மயிலை விதானை நன்னித்தம்பியின் சிரேஷ்ட புத்திரன் வைத்தியநாதர் அவர்களுக்கும் மயிலைப் பதிக்கோர் மாபெரும் மண்ணாடுகொண்ட சிற்றம்பலத்தின் மகள் வள்ளிப்பிள்ளையினதும் கனிஷ்ட புத்திரியான நகுலேஸ்வரியை நாளும் கோளும் நல்வழி நோக்கும் நன்னாளில் மாங்கல்யதாரணம் செய்து மகிழ்வோடு மயிலிட்டி 'நக்கட்டியவுடை' எனும் வளவிலே சீரும் சிறப்புடன் வாழ வழிவகுத்தனர். இவர்கள் இல்லறம் என்னும் நல்லறப்பூங்காவில் வாழ்ந்து வரும் காலத்தில் இல்லற வாழ்வின் நற்பயனாக 1962ல் விக்கினேஸ்வரன் என்ற மகனையும், 1964ல் பகீரதி என்ற மகளையும் பெற்று பெருந்தகையுடன் வாழ்ந்து தங்கள் பிள்ளைச் செல்வங்களைப் பேணிக்காத்து, நல்லறிவூட்டி நற்பண்புமிக்கவர்களாக கலங்கரை விளக்குகளாகத் திகழச்செய்தார்.

இவரது திருமணத்தின் பின் அவர் தனது குடும்ப நலன் கருதி மயிலிட்டியில் சுய தொழிலை ஆரம்பித்தார். மயிலிட்டி வடக்கு ஐக்கிய பண்டகசாலையைப் பொறுப்பேற்று அதன் நிர்வாகியாக அவரது மனைவியின் ஒத்தாசையுடன் நிர்வகித்து வந்தார். இவர்கள் சிரமத்தைப் பாராது அவ்வூர் மக்களுக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய சேவைகளைச் செய்து அம்மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள். ஆனால் மனைவியின் சுகவீனம் காரணமாக தொடர்ந்தும் தமது சேவையை வழங்க முடியாது போக, தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துடன் ஒன்றிணைந்து அதன் காசாளராக ஆரம்பித்து நாளடைவில் கிளை முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்று சேவையாற்றினார். அவர் பல கிளைகளில் முகாமையாளராகப் பணியாற்றி, அவர் சேவையாற்றிய பிரதேச மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் தேடிக்கொண்டார். ஏறத்தாழ மூன்று தசாப்தத்திற்கு மேலாக தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிந்து, நாட்டின் சீரற்ற அரசியல் நிலைமை காரணமாகவும் பிள்ளைகளின் வேண்டுதற்கு இணங்கியும் தன்னிச்சையாகவே தனது அறுபதாவது வயதினிலே ஓய்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளையில் இவர் மயிலிட்டி சமூகத்தோடு மிகவும் அந்நியோன்யப்பட்டு பலவிதமான சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டார். மனைவி வழி குல தெய்வமான ஆதி மயிலை பெரும்பரப்பு பிள்ளையார் கோவிலில் அதிக பற்றுடையோனாய் தன் இரு பிள்ளைகள் வசம் சென்று தரிசித்து பல தொண்டுகளும் செய்துவந்தார். அவ்வூர் மக்களால் பேய்க்கோவிலென்று அழைக்கப்பட்ட மயிலிட்டி அமெரிக்கன்மிஷன் தமிழ் கலவன் பாடசாலையை இவர்களது காலத்தில் கலைமகள் மகாவித்தியாலயம் எனப் பெயர்மாற்றப்பட்டு அதன் தராதரத்தை உயர்த்தி அவ்வூர் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு பங்களித்தார். இப்பாடசாலையின் பெற்றோர் -ஆசிரியர் சங்க அங்கத்தவராக மட்டுமன்றி, அடிக்கடி பாடசாலை சென்று தன் கருத்துக்களையும் நல்லாலோசனைகளையும் வழங்கி, அப்பாடசாலையின் நீண்ட கால அதிபராயிருந்த திரு. அப்புத்துரை அவர்களுடன் ஆழ்ந்த உறவைப் பேணிவந்தார்.

இவரது குடும்ப வாழ்க்கை பூவும் மணமும் போல் பொழிவு பெற்று சீரும் சிறப்புமாக அமைந்திருந்த வேளை, தடாகத்தில் விழுந்த கல்லால் ஏற்பட்ட கலக்கம் போல் இவரது குடும்பத்தில் கஷ்டகாலம் தோன்றி பல சோதனைகளைச் சந்திக்கவைத்தது. 1967ம் ஆண்டில் இவரது மனைவி சுகவீனமுற்று யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பாரிசவாதம் என்ற நோயால் பாதிக்கப்பட்டு படுக்கையும் வைத்தியசாலையுமாயிருந்த தனது மனைவியை பாரமரிப்பதெற்கென ஒரு பணிப்பெண்ணை அமர்த்தியிருந்தபொழுதினும், தானே தன் மனைவியையும் பிள்ளைகளையும் தன்னந்தனியாக அக்கறையுடன் கவனித்து வந்தார். அக்காலத்தில் அதிக வசதிகள் இல்லாத சமயம், தினமும் யாழ் வைத்தியசாலைக்கு பிள்ளைகள் சகிதம் சென்று மனைவிக்கு வேண்டிய ஆகாரங்களைக் கொடுத்து பணிவிடைகளும் செய்து நோயில் இருந்த மனைவியை மகிழ்விப்பார். தன் மனைவி பிள்ளைகளைக் காணாது தவிர்க்கக்கூடாதென கருதி, பிள்ளைகள் குழந்தைகளாயிருந்தும் கூட தன்னோடு நெடுதூரம் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்செல்வார்.

அவரது மனைவி நோய்வாய்ப் படுக்கையிலிருந்து கூறிய சில வார்த்தைகளே அவரது வாழ்க்கைக்கு உறுதியும் உரமுமாய் அமைந்திருந்தன. குறிப்பாக, 'பொன்னுத்துரை போல் ஒருவரை தான் கணவராக அடைந்தது அளப்பெரும் பாக்கியம்' என அவர் மனைவி பலருக்கும் கூறியதை இவர் நோய்வாய்ப் படுக்கையிலிருந்த சமயம் கூட இந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்து தனது பேத்தியுடன் பகிர்ந்து கொள்வார். இவர் தனது இனிய இல்லறத்தாளை 1969 ம் ஆண்டு பங்குனிமாதம் 30ம் நாள் இழந்து தனிமரமானார். மனைவிபால் அவர் பூண்டிருந்த அளப்பரிய பாசத்தாலும் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை எண்ணியும் மறுமணம் செய்யாது ஒரு மனமாக நின்று, தனது வாழ்க்கை என்னும் படகை பிள்ளைகளுக்காக அர்ப்பணித்து பல புயல்களுக்கு மத்தியிலும் திறமையாக துருப்பெடுத்து கரை சேர்த்தார்.

பிள்ளைகளின் நல்வாழ்வை வளமாக்கி வாழ்வளிக்க எண்ணி மூத்த மகன் விக்கினேஸ்வரனை மயிலிட்டி அ.மி.த.க. பாடசாலையிலும் பின்னர் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலையிலும் சேர்த்து ஆரம்பக் கல்வியை தொடக்கி வைத்தார். மேலும் உயர்கல்விக்காக மகனை மகாஜனாக் கல்லூரியில் சேர்த்தார். பல தனியார் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களுக்கும் அனுப்பி படிப்பித்தார். மேலும் பட்டப்படிப்பு படிக்க வேண்டும் எனக் கருதி கடல்கடந்து இந்தியா சென்று படிக்கவும் முழு ஒத்தாசையாகவிருந்தார். தனது மகனுக்கு சிறந்த நங்கையை தேடி மகனின் வாழ்வை வளம்பெறச் செய்ய வேண்டுமென எண்ணி, கொல்லன்கலட்டி கதிர்காமநாதன்-மகேஸ்வரி தம்பதியினரின் புதல்வி நிர்மலாவை நிச்சயித்து 1994ம் ஆண்டில் திருமணம் செய்துவைத்தார். அவர்கள் இல்லறத்தின் பயனால் பார்த்தீபன், ஓவியா, சாதனா என்ற பேரக்குழந்தைகளைக் கண்டு தனது கடைசிக்காலத்தை அவர்களுடன் இன்புறக் களித்தார்.

தனது ஒரே மகளான பகீரதியை சிறப்பாக வளர்த்து மயிலிட்டியில் ஆரம்பக்கல்வியையும், சிரேஷ்ட கல்வியை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும் ஊட்டி பல்கலைக்கழகம் வரை அனுப்பிவைத்தார். தாயில்லா பெண்பிள்ளை உரிய பருவத்தில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஊராரின் கருத்துக்கு மாறாக, மகளை பட்டப்படிப்பு வரை படிக்க வைத்து அவளின் காதல் திருமணத்திற்கும் இடைநில்லாது அனுமதித்தார். இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த ஜெயரட்ணம் - சத்தியவதி தம்பதியினரின் இரண்டாவது மகன் ரிஷிகரனை 1987ல் மணம் செய்து வைத்து அவர்களின் இல்லறத்தின் நற்பயனாக 1989ல் கிறிஷ்ணி என்னும் பேரப்பிள்ளையை பெற்றுக்கொண்டார். தனது முதல் பேரப்பிள்ளை என்ற சந்தோஷத்தில் அவளுக்கு பெயர் சூட்டுவது முதல் ஜாதகக் குறிப்பு எழுதுவது உட்பட சகல காரியங்களையும் அவரே கொழும்பில் முன்னின்று செய்தார்.

சீரற்ற நாட்டு நிலைமை காரணமாகவும், மயிலிட்டி கிராமம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைநத்தாலும் 1980 களில் இவர் இடம் பெயர நேர்ந்ததுடன் தனது வீடு, வளவு, சொத்துக்கள் அனைத்தையும் இழக்க நேரிட்டது. இடம்பெயர்வுகளின் போது பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் உற்றார், உறவினரின் உதவிகள் இவருக்கு மிகவும் தென்பூட்டியது. இதனைத் தொடர்ந்து மகள் குடும்பத்துடன் சில ஆண்டுகள் கொழும்பில் வாழ்ந்து வந்தார். எனினும் மகள் - மருமகன் தொழில் காரணமாக ஓமான், மாலைதீவு நாடுகளுக்கு சென்று வாழ நேரிட்டதால் யாழ்ப்பாணத்தில் சில ஆண்டுகள் உறவினருடன் வாழ்ந்தார். 1997ல் இந்தியா சென்று விடுமுறையில் வந்திருந்த மகளைச் சந்தித்து, அவளுடனும் பேத்தியுடனும் கூடி சகல திருத்தலங்களையும் தரிசித்து வரம்பெற்றார். மேலும் இந்தியாவின் வடபால் செங்கோட்டை, தாஜ்மகால் முதல் தென்பால் கன்னியாகுமரி, கேரளா உட்பட பல பிரசித்த இடங்களையும் கண்டுகளித்தார். மீண்டும் 1999ம் ஆண்டு தை முதல் இந்தியாவிற்கு குடிபெயர்ந்து மகள் - பேத்தியுடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தார். எனினும் 2002ம் ஆண்டு சித்திரையில் இவரது மகள் ஜேர்மனிக்கு குடிபெயர்ந்து குடும்ப சகிதம் வாழநேரிட்டதால், இவர் இந்தியாவில் தனியே வாழ நேரிட்டது. இக்கால கட்டத்தில் சென்னையில் இவர் பலருடனும் அந்நியோன்யமாகப் பழகி, தனது 75 ஆவது பிறந்த தினத்தை அங்கு சிறப்பாகக் கொண்டாடினார். இவரது தனிமையை விரும்பாத பிள்ளைகள் இவரை தங்கள் வசம் கூப்பிடத் தீர்மானித்து, 2004ம் ஆண்டு மார்கழி மாதம் மகனின் அழைப்பிலும் ஒழுங்குகளுடனும் இலண்டனுக்கு குடிபெயர்ந்து, மகன் விக்னேஸ்வரன் குடும்பத்துடன் இறுதிவரை வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதிக்காலத்தை பேரப்பிள்ளைகளோடு சந்தோஷமாக களித்தார். தனது பேத்தி கிறிஷ்ணியுடன் கொழும்பிலும் இந்தியாவிலும் கூட வாழ்ந்து, அவள் கல்வியில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டியிருந்தார். தானும் ஒரு குழந்தை போல் பல விளையாட்டுக்களையும் அவளுடன் கூடி விளையாடி பல கதைகளையும் கூறி அவளை மகிழ்வித்தார். தனது மூத்த பேரன் பார்த்தீபன் மேல் அதிக பாசம் காட்டி, தன் குடும்ப வாரிசு என கூறி பெருமைப்பட்டார். தனது இரண்டாவது பேத்தி ஓவியாவை தனது மனைவி 'இளையாங்கம்' சாயல் என கூறி அகமகிழ்ந்தார். 'என் இளையாங்கம் என ஓவியாவை அழைத்து, தன் அன்பான நினைவுகளை பரிமாறிக்கொண்டார். தன் மடிமேல் வளர்த்த சாதனா மீது அதிக பற்றும் பாசமும் கொண்டிருந்தார். மொழித் தொடர்புகள் குறைவாக இருந்த பொழுதினும் உள்ளத்தின் பரிமாறல்கள் இவர்களிடையே அதிகமாகவேயிருந்தது.

இவர் தனது கடமைகள் யாவற்றையும் செவ்வனே செய்து முடித்தேன் என்ற திருப்தியும் சந்தோஷமும் ஒரு புறமும்-தன் பேரப் பிள்ளைகளோடு குதூகலமாக வாழ்ந்தேன் என்ற பெருமிதம் மறுபுறமுமாக, சகலவற்றையும் அனுபவித்தவராக தனது இறுதி யாத்திரையை நோக்கி பயனிக்க ஆரம்பித்தார். உறவினரை தேடி சந்திக்க ஆசை கொண்டார். இதனால் இலங்கை, கனடா என பயணங்கள் மேற்கொண்டார். கனடாவில் தனது பெறாமகன் ஜெயந்திரன் குடும்பத்தினருடன் சில காலம் தங்கி அங்குள்ள தனது சகல உறவினரையும் சென்று சந்தித்து விருந்தோம்பினார். கடந்த மார்கழி மாதம் தனது மச்சாளின் இறுதிக் கிரியைக்காக தனது பெறாமக்கள் ஜெயந்திரன், பேபி, அனு சகிதம் கொழும்பு சென்று சகல உறவினர்களையும் சந்தித்து இறுதிவிடை பெற்று வந்தார்.

இலண்டனில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் இனிதே வாழ்ந்த இவர் 2009ம் ஆண்டு சித்திரை மாதம் தவறி விழுந்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனாலும் எழுந்து நடமாடும் அளவிற்கு இறைவன் அருள்புரிந்தார். தனது காலம் நெருங்கிவிட்டதென முற்கூட்டியே அறிந்தவராய் அனைவருக்கும் அறிவிக்கும்படி கூறினார். திடகாத்திரமான உள்ளமும் தெளிவான சிந்தனைகளையும் கொண்ட இவரை நீரிழிவு என்ற வியாதியைத் தவிர வேறு எந்த நோயும் அணுகியதில்லை. இறுதிக்காலங்களில் உணவில் நாட்டமற்றவராக இருந்தபொழுதினும் உறுதியுடன் காணப்பட்டார். எனினும் உணவை புறக்கணித்த காரணத்தால் வீட்டே சென்று பணியாற்றிய தாதிமார்கள் அவரின் உடலின் Sugar Level சரியாக இல்லையெனக் கண்டு இன்சுலின் போட மறுத்ததுமன்றி நீரிழிவு கோமாவிற்கு ஆளாகிடுவார் என்ற பயத்தில் 24 மணிநேர மருத்துவ கண்காணிப்பு தேவையென கருதி மருத்துவ விடுதிக்கு மாற்றம் செய்தனர். இவர் தனது மகள் பகீரதி சிரமத்தையும் பாராது நாடோறும் வைத்தியசாலை சென்று தனக்கு உணவூட்டி தன்னாலான பணிவிடைகளும் புரிந்ததைக் கண்டு பூரிப்படைந்தார்.

எனினும் சில நாட்களின் பின் மிகவும் பலவீனமாகி படுக்கையிலேயே இருந்துவிட்டார். அதனால் நித்திரை மாத்திரை போட்டுத் தூங்கும் நிலைக்கு ஆளாகினார். இறுதியாக 26ம் திகதி ஆவணி மாதம் இந்தியாவிலிருந்து திரும்பிய மகனையும் குடும்பத்தினரையும். மகள் குடும்பத்தினரையும் கண்டு இறுதி விடை பெற்றவராக 2009 ஆவணி மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை மதியம் அஷ்டமி திதியில் சிவபதமடைந்தார்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தவம் செய்தேன் உன் மகனாய் பிறந்திட நான்

எங்கள் அப்பாவிற்கு நாங்கள் ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு மகளும் எனப் பிறந்தோம். ஆனால் எங்களால் செல்லம் கொஞ்சமுடியாதபடி தங்கை பிறந்து சில காலத்தில் அம்மா பாரிசவாதத்தில் வீழ்ந்தார். அப்பா மழலைகளாகிய எங்களைப் பார்ப்பதா? அல்லது அம்மாவை பார்ப்பதா? எனக்கு 6 வயது தங்கைக்கு 4 வயது ஆனபோது எங்களின் அம்மா எங்களுக்கு அம்மாவாக இல்லாமல் போய்விட்டார். எங்களுக்கு அம்மா இல்லையே என்றுகூட உணரமுடியாத யது. சில தடவை அப்பாவிடம் கேட்பேன் அம்மா எங்கே என்று? அவர் சொல்வார் அம்மா ஊசி போட Hospital போய்விட்டா என்று.

எங்களுக்கு அப்பாதான் எல்லாம் சமையல் செய்து, சாப்பாடு தந்து, சட்டை போட்டு, அழகு பார்த்து தலைசீவி பாடசாலை அனுப்புவது முதல், முழு அம்மாவின் வேலைகளையும் அவரே செய்தார். எனக்கு ஞாபகம் உண்டு திருவிழாவுக்கோ, உறவினர் சடங்குகளுக்கோ போவதென்றால் அவரே சட்டை போட்டு தலை சீவி அழகு படுத்தி மறக்காமல் கறுப்பு பொட்டு நெற்றியில் மட்டுமல்லாது நாவுறுபடக்கூடாதென்று கன்னத்திலும் இடுவார்.

எங்களுக்கு அம்மா ஞாபகம் வராதபடி ஒரு குறையும் இல்லாமல் வளர்த்த அவர் மட்டும் எப்படி அம்மா ஞாபகம் இல்லாமல் இருக்க முடியும். பாவம் அத்தனை துன்பத்தையும், துயரத்தையும் தன்னகத்தே கொண்டு வெளியில் ஒரு சாதாரண மனிதனாக இருந்தார். உற்றார் உறவினர் மறுமணம் செய்யும் படி கேட்டபோதெல்லாம், அவர் கூறிய பதில் அம்மாவுடன் சில காலம் வாழ்ந்தாலும் பல காலம் வாழ்ந்த திருப்தியோடு பிள்ளைகளை கவனமாக வளர்ப்பது தான் தன் முடிவு என்றார். அவர் எங்களை தாலாட்டி, சீராட்டியதோடு மட்டுமல்ல அவரே உணவு செய்து தந்து வளர்த்தார். ஒரு ஆணின் சமையல் எப்படி இருக்கும்? அப்பாவின் புட்டு சற்று கடினதாக இருந்தாலும் அதில் அன்பும் பாசமும் கலந்து இருந்தது. சோறு, கறி, உப்புமா, என எங்கள் மெனு இருக்கும். உளுந்து அரைத்து தோசை கண்டதில்லை எங்கள் குசினி. கோதுமை மாவில் ஒரு தோசை சுடுவார் மிக நல்லாக இருக்கும். இருந்தாலும் குறைவிடாமல், ஆச்சுக்குட்டி தெய்வானை என தெரிந்தவர்களிடம் சொல்லி புட்டு இடியப்பம் தோசை என வாங்கி வந்து தருவார்.

அப்பாவின் கனவு நாங்கள் நல்லாய் படிக்க வேண்டும் என்பது தான். காலைக்கடன் முடித்து படிக்க மேசைக்கு போவோம். ஆனால் எனக்கு மனம் வேறு ஏதாவதில் அலைபாயும். அப்பாவைக் கண்டால் படிப்பது போல் பாசாங்கு செய்வேன். பாவம் அவர் பட்ட கஷ்டம் அந்த வயதில் எனக்கு எங்கே விளங்கியது.

எங்களது ஊர் மயிலிட்டி, மயிலிட்டி என்றால் எல்லோருக்கும் ஞாபகம் வருவது கடலும், மீனும் தான். ஆனால் நாங்களோ கடற்கரைக்கு தெற்கே 1 மைல் தொலைவில் பலா, மா, தென்னை வாழை மற்றும் பயிர்செய்கை நிலங்களை கொண்ட ஒரு செம்பாட்டுக் கிராமத்தில் இருந்தோம். இதை ஆதி மயிலிட்டி என அழைப்பது வழக்கம். எங்களுடைய வீடு நக்கட்டிய உடைவளவில் இருந்தது. பல வகை மாமரங்கள், பலாமரங்கள், தென்னை, தோடை என நிறைய சோலைகளை உள்ளடக்கி இருந்தது எங்கள் வளவு. மயிலிட்டியில் எங்களுக்கு நிறைய காணிகள் இருந்தன. ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு பெயர் வடலிப்புலம், தம்பானை வெளி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்திரை, வேப்புளியடி என சில ஞாபகம். அப்பா எல்லாக் காணிகளையும், தோட்டங்களையும் குத்தகைக்கு கொடுத்து விட்டார். அவருக்கு நாங்கள் படிக்க வேண்டும் என்பதே குறி.

மயிலிட்டியில் இருந்து நடேஸ்வர கல்லூரி, யூனியன் கல்லூரி தாண்டி மகாஜனக் கல்லூரியில் என்னை சேர்த்தார். பின்னர் கடல் கடந்து சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பயில வைத்தார். எதிர் நீச்சல் தான் வாழ்க்கை ஆனால் அப்பாவுக்கு வாழ்க்கையே எதிர்நீச்சல் தான் சோகமான அவர் முகத்தில் சில தடவை சந்தோசத்தை காணலாம். நான் அல்லது தங்கை வகுப்பில் முதல் பிள்ளையாக வந்தால் யாழ்ப்பாணம் கூட்டிச்சென்று படம் பார்த்து, சுபாஸ் கபேயில் ஐஸ்கிறீம் வாங்கித்தருவார். நாங்கள் வளர வளர அவரின் சந்தோஷம் கூடியது.

அப்பா எனக்கு தகப்பனாக மட்டும் அல்லாது ஒரு நல்ல நண்பனாகவும் இருந்தார். அவர் தான் எனக்கு பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார். எனது விருப்பு, வெறுப்புக்களை உணர்ந்து எனக்கு ஒரு நல்ல மனைவியையும் அவருக்கு ஒரு நல்ல மருமகளையும் தேடிக்கொண்டார். நான் வேலைக்கு போனாலோ அல்லது தனியாக விடுமுறை போன போதெல்லாம் அவரின் மருமகள் (என் மனைவி) முறையாக கவனித்து கொண்டதாக சொல்வார்.

அப்பா லண்டன் வந்து எங்களுடன் வாழ்ந்தாலும் அவர் நினைவும் மனமும் எப்பொழுதும் தாம் வாழ்ந்த ஊராகிய மயிலிட்டியை சுற்றி சுற்றி வரும். நேரம் தவறாது தமிழ் நியூஸ் கேட்பதும், புதினப்பத்திரிகை வாசிப்பதும் இவரது வழக்கம். இவர் தமிழ் அரசியல் போராட்ட வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவர். தன் இறுதிக்காலம் வரை ஈழத் தமிழர் விடுதலையை ஆத்மார்த்மாக நேசித்தவர். சொந்த மண்ணிற்கு திரும்பி செல்ல காலம் வரும் என்று நம்பி இருந்தார். 2009 ம் ஆண்டு ஆரம்பத்தில் இலங்கையில் தமிழருக்கு ஏற்பட்ட நெருக்கடிகள், துயரங்கள் இவர் மனதை வாட்டியது. எப்போதும் இது பற்றியே பேசுவார்.

பின்னர் தவறி விழுந்ததால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதும், அவர் நினைவெல்லாம் தமிழரின் அவலங்களையே சுற்றி வந்தது. எப்போ போனாலும் வன்னியில் என்ன நடக்கிறதென கேட்பார். எல்லாம் போய் விட்டதாக நம்ப தொடங்கினார். இனி எதுவும் செய்ய முடியாது என உணர்ந்தார். மீண்டும் ஊருக்குப் போக முடியாது இனி இருந்தென்ன பயன் என்று எண்ணி சாப்பாட்டை தவிர்த்தார். தமிழரின் தோல்வி கண்டு மனம் துவண்ட என் அப்பாவுக்கு தமிழரின் அவலங்கள் தீராத மன வேதனையை கொடுத்தது. இனி மீளவே முடியாத வீழ்ச்சி அவரை மீண்டும் வரமுடியாத உலகிற்கு கொண்டு சென்றது.

எங்களுடன் மிகுந்த நேசம் கொண்டவர் எங்களுக்காக தன்னையே இழந்தவர். எங்களின் சுகத்திலும், துக்கத்திலும் மிகுந்த நட்புடன் தோழமை பூண்ட உறவை கொண்டவர். யாவற்றிலும் மேலாக எங்களுக்கு தாயுமானவரே என்ன தவம் செய்தேன் உன் மகனாக பிறந்திட நான்.

என் அப்பாவே எனக்கு எல்லாமாக இருந்தவரே போய் வாருங்கள் உங்களை உங்கள் உணர்வை உங்கள் அன்பை, உங்கள் நினைவை எக்கணமும் நினைத்தவாறு நான் இருப்பேன். கைகூப்பி உங்களை வணங்குகிறோம் போய் வாருங்கள், போய் வாருங்கள் அப்பா.

**“அந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்**

**யாம் இலம் இதற்கு ஒரு கைமாறே”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தாயும் நீயே தந்தையும் நீயே”

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்தது மட்டுமன்றி
தியாகம் என்ற சொல்லிற்கு இலக்கணம் வகுத்தவராய்
மனையாளைத் துறந்து தனி மரமாய் நின்றபோதும்
தளரா நெஞ்சத்துடன் எத்துணையும் நாடாது
தந்தை தாய் இரண்டினையும் தன்னகத்தே கொண்டவராய்
பெற்றெடுத்த எங்களை பாசமுடன் பேணி வளர்த்து
உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த உங்கள் பாசத்தை
ஏட்டினில் எடுத்தியம்ப வார்த்தைகள் இல்லையப்பா
எல்லையில்லா உங்கள் பாசத்தை நானிலத்தில்
நாமினி எப்போ காண்போம் - எங்கு சென்றீர்களோ?

யாருக்கும் கடைமைப்படாது நற்பண்புடன் வாழ
உற்ற நேரத்தில் வேண்டிய பணிகளை உறுதியுடனாற்றி
எல்லையையும் தாண்டி பணிவிடைகள் பல செய்து
ஊர்போற்ற நாம்வாழ பல்கலைக்கழகம் மட்டுமன்றி
கடல் கடந்து கல்வி காண கடினமாய் உழைத்தீர்கள்
கடைசிவரை கூடவிருந்து கலங்காமல் காத்தீர்களே
களங்கமில்லா உங்கள் பாசத்தை இனி எங்கே நாம் காண்போம்.

குடும்பமுடன் நாமிருக்க நீங்களும் கூடவந்து
குதூகலித்து கொண்டாடி வாழ்ந்த வாழ்க்கையை
குவளயத்தில் இனி எப்போ நாம் காண்போம்?
‘நீ என் பேத்தி தானே’ என உரிமையுடன் குழாவியதும்
தள்ளாத வயதான 81லும் கூட மெய்மறந்தாடியதும்
என் மனதில் மட்டுமன்றி ஒளி நாடாவிலும் பதிவாகியதே!
என் பேத்தி படித்து சபையேறுவாளென்ற
கனவை நினைவாக்க அயராது பாடுபட்டு
ஆஸ்பத்திரி படுக்கையிலும் கூட அடிக்கடி விசாரித்து
‘அப்போ நீ சட்டத்தரணி ஆவாய்’ என அகமகிழ்ந்து
அவளின் பல்கலைக்கழக அனுமதிவரை காத்திருந்தீர்களோ!
காணாமல் தவிக்கின்றோம் எங்கு சென்றீர்களோ!
நம் நிலம் உடமைகளை இழந்த கவலை இருந்தபோதும்
நீரிழிவு நோய் உங்களை பற்றிக்கொண்டாலும்
மனத்தைரியமாய் உடலாரோக்கியமாய் தெளிவாயிருந்தீர்கள்
இந்தியாவில் திருத்தலங்கள் தரிசித்து திருவருளும்
பெற்றதனாலோ என்னமோ சென்றவிடமெல்லாம்
சீரும் சிறப்புமாய் வாழ்ந்தீர்களே.
பேரப்பிள்ளைகளுடன் பேரன்பு கூர்ந்து
பேரின்பமாய் பெருமிதமாய் வாழ்ந்தீர்களே
என்ன குறை உங்களுக்கு வாழ்ந்திருக்கலாம் சில காலம்
நம் நாட்டு நிலை சீராக இருந்திருந்தால்
வாழ்ந்திருப்பார் என்னப்பா பல ஆண்டுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்திய வாழ்வு ஆரோக்கியத்தை பாதித்தபோதும்
மற்றோரை இடையூறாது தன் வேலையை தானாற்றி
தன் நம்பிக்கையோடு சந்தோஷமாய் வாழ்ந்தீர்களே!
உடலாரோக்கியம் குன்றின பொழுதினும் அடிக்கடி
இலங்கை சென்று உறவினருடன் உறவாடி உடல்தேறி
உல்லாசமாய் ஊர் சுற்றி திரும்பினீர்களே!
ஏன்னப்பா எல்லோரையும் விட்டு சென்றீர்களே!!!

இறுதியாய் கலந்து கொண்ட மச்சாளின் சடங்கில்
உறவினர் அனைவருடனும் ஒன்று கூடி குழாவி
பிரியப்போகிறோம் என்று உணர்ந்து தானோ என்னமோ
எல்லோரும் வரவேண்டும் உங்கள் மரணச் சடங்கிற்கென
நீங்கள் முன்கூட்டி அழைத்ததால் தானே உங்கள் பெறாமகன்
ஜெயந்திரன் கனடாவிலிருந்து வந்து கலந்து சிறப்பித்தாரே!
சனிபகவான் உங்கள் வீட்டில் வாசம் கொண்டதாலோ
என்னவோ படுக்கை போய் பாழடைந்து விட்டீர்களே!
உடல் நலிந்து பலம் இழந்து படுக்கையில் இருந்த போதும்
நம் தேசம் செய்தி தேடி அறிய ஆர்வப்பட்டீர்கள்
மீளப்படுமோ நம் நிலம் என மனத்தைரியம் இழந்தீர்கள்
அதனால் தானோ உணவை வெறுத்து உடலை வருத்தினீர்களோ!
என் தாயும் தந்தையுமாயிருந்த என்பாசமிகு அப்பாவே
எங்கள் குலக் கொழுந்தே என் தெய்வமே
எங்களை விட்டு பிரிந்து சென்றீர்களோ
எங்கொலிக்கும் உங்கள் குரல் இனி
அங்கொலிக்கும் உங்கள் குரல் சொர்க்கத்தில் நிச்சயமாய்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!

மகள் - பகீரதி ரிஷிகரன்

---

**God's Precious Gift To Us**

I remember with sorrow that parting day
A heart of gold stopped beating.

As mild as flower you were in this world:
Your kindness and humility.
Deep devotion of love and great sacrifice
God's precious gift to my wife and all.

The gates of memory never close;
As time takes away the edge of grief
Memory turns back every leaf
For love never dies.

To be in God's keeping is surely a blessing!
May your soul rest in peace.

**J. C. Reshekaron (Son-In-Law)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Love is God*

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத

**Sri Nagulambika sametha**

**Sri Naguleswara swamy Temple**

Sivasri
K. Naguleswara Kurukkal *J.P. (All Island)*
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai
Kankesanthurai, Sri Lanka.
T.P No: 060221 2440

சிவஸ்ரீ
கு.நகுலேஸ்வரக் குருக்கள் (ச.நீ)
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
தொ. இல: 060221 2440

## ஆத்ம சாந்தி அமரர் பொன்னுத்துரை

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பொன்னுத்துரை லண்டனில் சிவபதமடைந்த துக்ககரமான செய்தி அறிந்து துயரமடைந்தோம். அன்னார் தனது வாழ்நாளில் பெரும் புகழுடன் வாழ்ந்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாடான தருமங்கள் செய்து எல்லோரினதும் அன்பைப் பெற்றுவந்தவர்.

நகுலேஸ்வர ஆலயத்தில் நடைபெறும் கொடியேற்ற உபயக்காரராகவும் மற்றும் விசேட காலங்களிலும் தவறாது ஆலயத்திற்கு வருவார். நான் இலண்டன் வந்த பொழுது என்னை அன்புடன் வரவேற்று எப்ப ஐயா கும்பாபிஷகம் கொடியேற்ற திருவிழா நடைபெறுமென்று ஆர்வமுடன் விசாரித்தார். அப்படிபட்டவர்களது எண்ணம் நிறைவேறாமல் எங்கள் அனைவரையும் விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்! ஆகவே பிறப்பும், இறப்பும் எப்பொழுதே எழுதப்பட்டுவிட்டது. ஆகவே அன்னாரின் மறைவால் துயருறும் பிள்ளைகள் மற்றும் சுற்றாரும் துயர் நீங்கி அன்னாரின் ஆன்மா நகுலேஸ்பர பெருமானின் பாதவிந்தங்களை அடைய எல்லோரும் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி

சிவ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்

**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்**

**MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE**

மஹாராஜஸ்ரீ
சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா – பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

T.P : 021 222 5799

Maharajasri:
S.D. Shanmuganatha Kurukkal
Governing Authority & Chief High priest
Mavai Aadheenam,
Mariddapuram, Sri Lanka.
TELLIPPALAI 10-09-09

# பிரார்த்தனை

தீர்க்க தரிசனங்களோடு குலதர்மங்களையும், ஆச்சிரம தர்மங்களையும் அழியவிடாது, இனிமையான சொற்களால் சமுதாயத்தினரை அணைத்து அச்சொற்களில் தொனித்த ஆணையையும், ஆணையிலடங்கிய அமைதியான கடுமையையும், பக்திகலந்த ஆலோசனைகளையும் கொண்டு ஊரவர்களை நல்வழிப்படுத்திய பெருந்தர்மம் கருகப்பனை சுப்ரமண்யம் குடும்பத்தினரைச் சாரும். அவ்வழியில் தோன்றியவருள் திரு பொன்னுத்துரையும் ஒருவர். சாந்த சீலராக மக்கள் சேவையின் தொண்டுகள் சார்பாக தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளராக கடமையாற்றி சிறந்த நற்தொண்டனென மதிக்கப்பட்டு வயது வந்ததும் இளைப்பாறினார்.

மயிலிட்டி வைத்திலிங்கம் அவர்களது மகள் நகுலேஸ்வரியை மணஞ்செய்து விக்னேஸ்வரன், பகீரதி எனும் பிள்ளைகளோடு நல்லற வாழ்வின் சிகரமாக வாழ்ந்து தனது 82வது வயதில் இறைபதம் இணைந்தது ஓர் கலச் செயலின் மாண.பேதான். பண்பின்சிகரமாகவும் அஞ்சா நெஞ்சத்துடன் தர்ம கைங்கர்யங்களை ஆற்றியும், அவற்றை ஆற்றுப்படுத்தியும் தனது மகன் விக்னேஸ்வரனுடன் லண்டன் மாநகரில் சிலகாலம் தங்கியிருந்தும், தனது ஆண்மை, ஆச்சிரம தர்ம வாழ்வு, சமய சிந்தனைகள் எதையும் கைவிடாது முன்னிறுத்தி அருமையான வாழ்வின் பூரணத்துவம் இவ்வளவு தான் என்ற சிந்தனையூற்றோடு சிவபதம் சேர்ந்ததும் விதியின் செயலே. 2008ம் ஆண்டில் டிசம்பரில் தனது மைத்துனி கனகசபை வள்ளியம்மையின் இறுதி மரணச்சடங்கில் இணைந்து சிறப்பாக நடாத்திவிட்டு அமைதியோடு வாழ்நாளைக் கழித்து தானும் அவ்வழியே சென்றதும் ஓர் புதுமையல்ல “வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்” என்ற நியதிதான் யாவருக்குமுண்டு.

அன்னாரது வழினின்று அவரது சிந்தனைகளை வழிநடத்துவதே அவருக்கு யாம் தரும் சாந்தி பரிகாரம். ஆத்ம சாந்திக்காக யானும் மாவைக் கந்தப் பெருமானை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாத குருக்கள்

மாவையாதீனகர்த்தா - பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

யாழ்ப்பாணம்
05.09.2009

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் கீரிமலை கருகம்பனையைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்களை நான், பல ஆண்டுகளாக அறிவேன். இவர் மிகப் பண்பும் பணிவும் வாய்ந்த ஒரு தமிழ் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் மூத்த சகோதரன் திரு. கனகசபை முன்னாள் விதானையாரைப் போன்றே திரு. பொன்னுத்தரையும் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றிப் பேணியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

தந்தை செல்வா காலத்திலிருந்தே இவர் தமிழரசுக் கட்சியில் அழமான ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் கட்சிக்கூட்டங்களிலும் சத்தியாக்கிரக போராட்டங்களிலும் பங்கு கொண்டார்.

திரு. பொன்னுத்துரை அவர்கள் இலங்கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் திருத்தலங்களாகிய கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தினதும் மாவை கந்தசாமி ஆலயத்தினதும் வழிபாடுகளிலும், விழாக்களிலும் தீவிர பங்கெடுத்தார். அவற்றின் மேம்பாட்டிலும் அக்கறை கொண்டிருந்தார். இவர் தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராக மூன்று தசாப்தத்திற்கு மேலாக பணியாற்றியவர். கடமை, கண்ணியம், , கட்டுப்பாடு என்ற நெறிகளைப் பேணிப் பணியாற்றி இப்பிரதேச மக்களின் நல்மதிப்பையும், அன்பையும் தேடிக்கொண்டவர்.

இவர் இளைப்பாறி கொழும்பில் அவரது மகளுடன் தங்கியிருந்த காலகட்டத்தில் காலம் சென்ற முன்னாள் யாழ் நகரசபை முதல்வர் திரு பொன். சிவபாலனுடன் என்னைப் பல தடைவைகள் சந்தித்து உரையாடியமை இன்றும் என் நினைவில் ஆழமாக உள்ளது. இவர் லண்டனில் 27. 08. 2009 காலமான செய்தியை அறிந்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன்.

அன்னாரின் ஆத்ம சாந்தி அடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். இவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

மாவை.சோ.சேனாதிராசா. பா.உ
பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Father In Law

You were a great father and
I was happy to call you my dad
You treated me as your daughter
Though you had a daughter of your own

I thank you for all the great things
You did for my husband
Bringing him up on your own and
Choosing me as your daughter in law

I never knew how much you meant to me
Now I know it was a lot
You were a man of great understanding and
You were the best father in Law

I am sorry if I had done anything wrong
I know you were a man with a golden heart
I would like you to know
I am proud to be your daughter in Law

***Nirmala Vigneswaran***

***Daughter in Law***

## My "Thaththa"

My Granddad was a very humble man. He never did anything incredible when I was with him apart from dancing, but he was a great man. I still have the memory of my granddad coming to live with my family in England. I was eight and it was the time my little sister Saathana was born. He quickly bonded with her and he enjoyed spending time with her. There were times my grand dad and me fought over the access of TV remote control. The language was a barrier between us. Still I understood him. He was strong in mind and heart. I never seen my granddad getting really angry or speaking loudly.

My dad used to tell me how my granddad brought them up on his own when they were very young. It was an incredible story to listen and I admired my grand dad's courage.

It was really sad to see him in the hospital. He was fragile and weak. Still he managed to smile and exchange few words when me and my family went to see him at hospital. He was a great man and he will definitely be missed. I'm really glad that I was with him in his second to last day of life and I'm proud he was my granddad. I hope that wherever he is now, he's at peace.

**Parthepan Vigneswaran**

**Grand Son**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAREWELL TO MY DEAREST THATHA...

*"Break, break, break,*
*On thy cold gray stones, O Sea!*
*And I would that my tongue could utter*
*The thoughts that arise in me."*

The 17th Century metaphysical poet John Donne once wrote, ''Any man's death diminishes me because I am involved in mankind". This applies to every human being including me. But Mr. Subramaniam Ponnuthurai was not just any man; he was a loving husband, a caring father and, most importantly the best grandfather anyone could ask for. Unlike many of my Tamil friends, who because of our country's war-torn and turbulent history, were never able to meet their grandparents, I have been immensely blessed to have had Thatha in my life since infancy.

The earliest memories I have of him date back to when we lived together in India, where endless bickering and arguments were the foundation of an affectionate relationship. He was a child at heart, who did and enjoyed the same things as his ten-year-old granddaughter did. He completely startled me when he eagerly and daringly got on all the rides, even on a roller-coaster, in a theme park in India. He never stopped having fun and even at the ripe age of 81 he made me laugh with his dance routines. Unfortunately a few weeks after this entertainment and joy, he was taken into hospital. It was during the visits to the hospital that we had really intimate and deep conversations. I learnt a lot about his past and also about Ammamma. I realised that even 40 years after her death, he never stopped loving his "Illayangam" and that her memories were still afresh in his mind. He told me that during her last days at hospital, he travelled from one town to another several times a day to spend time with her. He told me that Ammamma thanked him for everything and said she was blessed to have such a loving and dedicated husband, who went through a great deal of trouble to take care of her.

In the same manner he also attended to all my needs. Back in India, if there was anything I wanted from the shop nearby, he would stop whatever he was doing (even if he was having lunch) and get it for me. He also knew me really well and was able to guess my moods. At times his rudeness got to me and, realising this, he would try to make me feel better by saying, "Nee enda pethi thane". More than anything he showed a huge interest in my studies from the very beginning and always encouraged me to do my best. Whilst we were living in Sri Lanka, he went to the trouble of accompanying me every day, all the way from Mattakuliya to Bambalapitya, just to take me to nursery. Even during his last days at the hospital he would often ask me if he would still be alive to see me going to "Campus". In this regard I am happy that my last conversation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with him was about my A-level results and going off to university to read Law. Although he did not react much to the news I could tell from his eyes that he was extremely delighted and proud.

I believe that my Thatha was a very wise man and was a great example in many ways. First, after Ammamma passed away in 1969, he sacrificed his whole life for his two children, my Amma and Vicky Mama, and single-handedly raised them. Although single-parenting is prevalent in today's society, the easiest and most common option 40 years ago would have been to re-marry. From Thatha's appearance and attire, I initially misjudged him to be a man of traditionalism and conventionalism. But, by permitting Amma to marry Appa, a Catholic, at a time when inter-religious marriages were not welcomed in Jaffna, he proved himself to be ahead of his time and showed that the sanctity of one's faith lie never in sectarian dogmatism but in love and unity. I still remember some heated altercations he had with Appa about family matters and our country's politics. But Thatha was very articulate and bold in expressing his views and opinions and often made my father concede the point of issue. I admired this courage of Thatha and learnt to speak out my heart fearlessly, regardless of what the consequences would be as long as I was doing the right thing.

Over the 18 years I have known Thatha, I have seen so many different sides to him. I will never forget the moments he descended to my level to play and argue with me as a child or his great fatherly advice on family and educational matters as a mentor. Nor will I ever forget his piercing greyish brown eyes, which glared deeply into mine. He was truly a great and honest man, who went to any lengths to do what was best for his loved ones. And only after his death did I realise that there were so many things that I had not thanked or appreciated him for. Apart from my parents, there is no-one else I love more than Thatha and it feels so surreal that he is gone. I am going to miss Thatha more than words can describe, but I hope that his loving memories will sustain me as life goes on.

Goodbye Thatha! You were one of a kind and you'll be missed greatly but never forgotten. I pray that your great soul rests in peace.

*"Break, break, break*
*At the foot of thy crags, O Sea!*
*But the tender grace of a day that is dead*
*Will never come back to me."*

**Chrishni Reshekaron (Granddaughter)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பின் சின்னண்ணா!!!!
## ஆறாத்துயரில் தங்கையின் நிலைவலைகள்!!!!!!

அன்று வியாழக்கிழமை, அதிகாலை தொலைபேசி அடித்தது. அந்தநேரத்தில் வரும் அழைப்பு வெளிநாட்டிலிருந்து வருவதை உணர்ந்தோம். என்மருமகள் பகீரதி அழுது கொண்டு, “அப்பா போய்விட்டார” என்ற பேரதிர்ச்சியைத் தந்தாள்

கடந்த டிசெம்பர் மாதம் தான் எனது சின்ன மச்சாளின் இறுதிக் கிரியைகளின் போது கொழும்பில் சின்னண்ணையைச் சந்தித்தேன். பல ஆண்டுகளுக்குப் பின் சந்தித்ததால் பல விடயங்களையும் கதைக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது சுகநலனிலேயே நான் கரிசனையாக இருந்தேன். தான் தான் எங்கள் குடும்பங்களில் இப்போதுஇருப்பவர்களுக்குள் வயதுக்கு மூத்தவர் என்று சொல்லி பெருமைப்பட்டார். அங்கு சென்று எல்லாரையும் சந்தித்த நிகழ்வுகள் எனக்கு மட்டுமல்லசின்னண்ணைக்கும் பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்த சந்தர்ப்பங்களாகும்.

விபரம் அறிந்த அன்றிரவிலிருந்து சின்னண்ணாவின் நினைவுகள் என் மனக்கண்ணே வந்து போய்க் கொண்டிருந்தன. எனது அப்பா, அம்மாவை சிறுவயதிலேயே இழந்த நான், நான்கு அண்ணர்களின் அரவணைப்பிலே வளர்ந்தேன். என்னை இராமநாதன் கல்லூரியில் விடுதியில் சேர்த்துப் படிப்பித்தார்கள். மூத்த அண்ணா, கனகசபை, கல்யாணம் முடித்த காலத்தில் எனது சின்ன அண்ணா தான் எனது படிப்பிற்கான உதவிகளை தொடர்ந்து
செய்து வந்தார். ஒரேயொரு தங்கை என்று என் அண்ணாமார் என்னை அம்மா - அப்பா இருந்து பார்ப்பது போலவே கண்ணும் கருத்துமாய் வளர்த்தனர். எனக்கு ஒரு குறை வைக்காது, கேட்டதெல்லாம் வாங்கித் தந்தார்கள்.

சின்னண்ணா மயிலிட்டியில் விவாகம் செய்தார். பின் எனக்கும் மயிலிட்டியிலேயே திருமணம் நடைபெற்றது. நானும் திருமணம் முடிந்து கணவருடன் மயிலிட்டியிடீலேயே சில காலம் வாழ்ந்து வந்தேன். எனது கணவர் சின்னண்ணாவின் மனைவியின் ஒன்று விட்ட தம்பியும் பக்கத்து வீடும் கூட. எனவே எனது குடும்பமும், சின்னண்ணாவின் அண்ணி நோய்வாய்ப்பட்டு இரண்டு வருடத்தில் காலமாகிவிட்டார். சினனண்ணா தான், மகன் விக்கினேஸ்வரன், மகள் பகீரதி இருவரையும் வளர்த்து, படிப்பித்து, திருமணம் செய்து வைத்தார்.

இன்று பிள்ளைகள் குடும்பங்களுடன் லண்டனில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தவர். இறுதி காலத்தில் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலை, வயோதிபர் விடுதி என வாழவேண்டிய நிலையில் இருந்தது எனக்கு மிகவும் மனவருத்தத்தை கொடுத்தது. அங்கிருந்து என்னுடன் தொலைபேசியில் கதைப்பார். அவரது தளர்வைக் உணர்ந்து மனங்கலங்கினேன். இவ்வளவு குறுகிய காலத்தில்அவர் எங்களை விட்டுப் பிரிவார் என்று எதிர்பார்க்கவில்லை.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கூடியிருக்க அவர் எம்மை விட்டு இறைவனடி சென்றுவிட்டார். சின்னண்ணா எம்மை விட்டு பிரிந்தாலும் அவர் நினைவுகள் என்னை விட்டுப் பிரியாதவை. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கும்.

**அன்புச் சகோதரி**
**திருமதி புவனேஸ்வரி பொன்மயிலைநாதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சின்னண்ணை

எள்கள் குடும்பத்தில் சின்னண்ணை இரண்டாவது அண்ணை. சின்ன வயதிலிருந்தே எல்லோருடனும் சிரித்துப் பேசுவதும், அமைதியாகப் பழகுவதும் அவரது சுபாவம். எமது பெற்றோரை இழந்துவிட்ட இளமைக்காலத்தில் சகோதரர்கள் நால்வரும், தங்கை ஒருவருமாக நாம் ஐவரும் பெரும் கஷ்டநிலையில் வாழ்ந்தமையை இப்போது கனத்த மனதுடன் எண்ணிப் பார்க்கிறேன். நாம் ஐவரும் எமது ஆரம்பக் கல்வியை இளவாலை மெய்க்கண்டான் வித்தியாலயத்திலே கற்றோம். அங்கு நானும் தம்பி (குஞ்சியும்) ஆறாம் வகுப்பு வரை கற்றோம். சின்னண்ணை எட்டாம் வகுப்புவரை கற்றார். எமது கஷ்டநிலை காரணமாக மூத்த அண்ணையும் தங்கையும் மேற்கல்வியைத் தொடர நாம் மூவரும் தோட்டவேலையில் ஈடுபட்டு ஐவரும் ஒற்றுமையாக வாழ்ந்தோம். எமது உற்பத்திப் பொருட்களை எல்லாம் சின்னண்ணை பஸ்ஸில் எடுத்துச் சென்று பணமாக்கி மூத்த அண்ணையிடம் கொடுப்பார்.

1990 களில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சின்னண்ணையின் பிள்ளைகளான விக்னேஸ்வரன், பகீரதி ஆகியோர் வெளிநாடு சென்றமையால் கொழும்பு, இந்தியா போன்ற இடங்களில் வசித்துவந்த சின்னண்ணை பின்னர் 1993 இல் நாம் இடம் பெயர்ந்திருந்த கோப்பாய் இல்லத்தில் எம்முடன் இருவருடங்களுக்கு மேலாக வசித்து வந்தார். அவ்வேளையில் காலத்தின் கண்ணறிந்து அவர் எமக்கு ஆற்றிய உதவிகளை நான் என்றும் மறக்கமுடியாது. பின்னர் 1995 இல் ஏற்பட்ட இடம்பெயர்வினைத் தொடர்ந்து லண்டன் சென்று தனது மகனுடன் இணைந்து கொண்டார்.

சின்னண்ணையின் இநதியப் பிரயாணம் தொடர்பான விபரங்களை அன்றாடம் அறிந்தபோதே எனக்கு எனது பிள்ளைகளுடன் பாரத தேசத்தின் புண்ணிய திருத்தலங்களை தரிசிக்கவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. 2008 இன் இறுதிப்பகுதியில் இந்தியா செல்லவென எனது குடும்பத்தினருடன் நான் கொழும்பு சென்று பிரயாண ஆயத்தங்களை மேற்கொண்டவேளை எமது மைத்துணி (மூத்த அண்ணனின் மனைவி) காலமானார். அவரது இறுதிக்கிரிகைகளில் கலந்துகொள்ளவென தனது 81வது வயதிலும் தள்ளாத நிலையில் சின்னண்ணை கொழும்பு வந்திருந்தார். அவ்வேளை ஏறத்தாழ ஒரு மாதம் சின்னண்ணையுடன் ஒன்றாக வசிக்கும் சந்தர்ப்பத்தினை எனக்கு கடவுள் வழங்கியிருந்தார். அவ்வேளையில் நானும் சின்னண்ணையும் எமது கடந்த காலங்களினை அன்றாடம் இரைமீட்டு அளவளாவுவோம். எதிர்பாராத விதமாக எமது தங்கையும் அவ்வேளை கொழும்பு வந்து எம்மை எல்லாம் சந்தித்தமை மிக்க மகிழ்ச்சியான நினைவாகும். ஜனவரியில் நான் இந்தியா செல்ல அவரிடம் விடைபெற்ற போது தான் இலண்டன் சென்றபின்னர் நாம் தொலைபேசியில் கதைப்போம் என்று எனது இந்திய தலயாத்திரை சிறப்புற வாழ்த்திவிடைகொடுத்தார். ஆயினும் அன்று விடைபெற்றவேளை அதுவே எமக்கிடையிலான இறுதி சந்திப்பு என நான் எண்ணியிருக்கவில்லை.

தனது இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் தொலைபேசியூடாக என்னுடன் கதைக்கவேண்டுமென பேரவாகக்கொண்டு முயற்சித்தபோதும் அது பலனளிக்காமையை எண்ணிப்பார்க்கையில் எனது இதயம் கனக்கின்றது. ஒரு கூட்டுப்பறவைகளாக நாம் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த வாழ்க்கையும் எம்மிடையேயிருந்த அன்னியோன்னியமான பாசப்பிணைப்பும் என்றும் மறக்க இயலாதவை. மறைந்தும் மறையாக மாணிக்கமாக எம்மனதில் உலாவிவரும் என் சின்னண்ணையின் ஆத்மா நகுலேஸ்வரபெருமானின் தாள்களினை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெறுவதாக.

**ஓம் சாந்தி**

**ஆசைத்தம்பி இரத்தினம்,**
**கடவைப்புலம்,**
**சுன்னாகம் கிழக்கு,**

**சுன்னாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள எங்கள் சீனியப்பு

காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்கள் தந்தையின் மூத்த தம்பி, இவரை சீனியப்பு என்றுதான் நாங்கள் அழைப்போம். எங்கள் குடும்பத்தில் மூத்தவர்களான கேசவர், மகேந்திரன், ஜெயந்திரன் ஆகியோரின் சிறுபிள்ளைப் பராயத்தில் எமது பெற்றோர்களுடன் உடனிருந்து பராமரித்து, அரவணைத்து மகிழ்ந்தவர். திருமணமாகி பின் மயிலிட்டி சென்றும் எமது குடும்பத்துடன் பாசம் குறையவில்லை. விஷேட தினங்கள், திரு விழாக்கள், விடுமுறை நாட்களில் தன் பிள்ளைகளையும் அழைத்து வந்து எம்முடன் உறவாடி மகிழ்ந்தார். அவரது பிள்ளைகளான விக்னேஸ்வரன், பகீரதியும் இன்று வரை எம்மை உடன் பிறந்த சகோதர்களாவே கருதி பழகி வருகிறார்கள் நாட்டுச் சூழ்நிலை காரணமாக மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து சில காலம் எம்முடன் இளவாலையில், பின்னர் இங்கிலாந்திலே தனது மகள் விக்னேஸ்வரனுடன் வாழ்ந்த காலத்தில் உறவினருடன் உறவாட விரும்பி கொழும்பில் ராணியுடனும், கனடாவில் ஜெயந்திரனும் சில காலம் தங்கியிருந்து பழங்கதைகள் கூறி மகிழ்ந்தார். இவர் தனது சகோதரருடன் ஒற்றுமையாகவும், அன்புடனும், பாசத்துடனும் பழகி வந்தார். தமது பெற்றோர்களின் திதிகளில் சகோதரர் நால்வரும் ஒன்று கூடி தமது அன்புத் தங்கையும் உடனிருக்கும் காட்சி இன்று எமது மனங்களில் நிழற்படமாக பதிந்துள்ளது.

இவர் எமது குடும்பத்தில் இருந்த பாசத்தின் காரணத்தினால் கடந்த மார்கழி மாதம் எமது தாயாரின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ள தனது முதுமையும் மறந்து கடல் கடந்து சென்று பங்கு கொண்டார் இச் சந்தர்ப்பத்தில் இவர் தனது சகோதரரான ஆசையையும், அன்புச் சகோதரி புவனேஸ்வரியையும் (மாமி) எமது குடும்பத்தினரையும் ஏனைய உற்றார் உறவினர்களையும் சந்தித்து மகிழ்ந்தார். 3 மாதங்கள் கொழும்பில் கழித்து மீண்டும் நலமாக லண்டன் வந்து சேர்ந்தார்.

அம்மாவின் இறுதி யாத்திரையின் பின் இவரின் வேண்டுகோளும், ஆசையும் நாம் அனைவரும் அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் பங்கு கொள்ள வேண்டும் என்பதேயாகும். இவரின் இறுதி விருப்பத்தினை நிறைவேற்ற ஜெயந்திரன் கனடாவிலிருந்தும், உள்ளூரில் வசிக்கும் அனுராதாவும், அவரின் பிள்ளைகளுடன் இணைந்து ஈமக் கிரிகைகளில் பங்கு கொண்டமை எமக்கு மன நிறைவைத் தருகிறது.

இவர் எங்களை விட்டு பிரிந்தாலும் இவர் எங்களுடன் பழகிய காலங்களில், பழங்கதைகள் பேசி எம்மையும் மகிழ்வித்து தானும் மகிழ்ந்ததும் இன்னும் எம் நினைவுகளில் நிற்கிறது. இவரின் சிரிப்பலைகள் இன்னும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கவுனாவத்தை வைரவப் பெருமானை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! சாந்தி !

**உங்கள் பாசமுள்ள பெறாமக்கள்**

**கேசவர் (யாழ்ப்பாணம்)**
**மகேந்திரன் (யாழ்ப்பாணம்)**
**ஜெயேந்திரன் (கனடா)**

**ராணி (கொழும்பு)**
**பேபி (கனடா)**
**அனுராதா (லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகனின் புலம்பல்.....

எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவராலும் சீனியப்பு என்று அன்புடன் அழைக்கப்பட்ட எனது பெரியப்பா இன்று எங்களுடன் இல்லை என நினைக்கும் போது எமது மனம் மிகவும் கலங்குகிறது. சீரும் சிறப்புடன் வாழ்ந்து பலர் போற்றும் வண்ணம் தன் உழைப்பால் உயர்ந்த ஓர் உத்தம ஆத்மா இன்று இறைவனடி சேர்ந்துள்ளது. பிறப்பு என்று ஒன்று இருந்தால் அங்கு இறப்பு என்ற ஒன்று உண்டு என்பது வாழ்க்கையின் தத்துவம். இத்தகைய பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் ஓர் ஆத்மா நல்ல பலாபலன்களை செய்து கன்ம மறுபிறப்பு எனும் தடை நீங்கி இறைவனது பேரானந்த பாதங்களை அடைய வேண்டும் என்பது எமது இந்து சமயத்தினுடைய உயர்ந்த குறிக்கோளாகும். அது போலவே எமது சீனியப்புவும் இவ்வுலகில் வாழ்ந்தது மட்டுமல்லாது பலர் போற்ற மிக கௌரவமாக அனைவராலும் மதிக்கப்பட்டு இப்பூவுலகில் தாணதர்ம கருமங்களை செய்து தனது பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் இறுதிக் காலத்தில் மிகவும் சந்தோசமாக இருந்ததுடன் தனது சகோதா சகோதரி, உற்றார் உறவினர் அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் மிகவும் இனிமையாக பழகி. அனைவரது சுகதுக்கங்களில் கலந்துக் கொண்டு அவரவர் நலன்களை விசாரிப்பதில் சீனியப்புக்கு நிகர் வேறு யாரும் இல்லை. அவ்வாறு அனைவரது நலனிலும் அக்கறை கொண்ட ஓர் ஆத்மா இன்று எங்களை தனியே தவிக்கவிட்டு இறைவனது பாதங்களில் சரணாகதி அடைந்துள்ளது.

"சீனியப்பு" எனக்கு நினைவிருக்கிறது சிறு வயதில் நான் மயிலிட்டியில் உள்ள உங்களது வீட்டுக்கு விருப்பத்துடன் வருவதுடன் உங்கள் பிள்ளைகளுடன் மிகவும் அன்புடன் பழகியும் இருக்கிறேன். நீங்கள் இடம்பெயர்ந்து எங்களுடன் கோப்பாயில் 93 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமக்கு பல உதவிகள் செய்தீர்கள். கடந்த வருடமும் நீங்கள் கொழும்பு வந்த பொழுது என்னை அன்புடன் அரவணைத்து சுகம் விசாரித்தீர்கள். நீங்களும் உங்கள் தம்பி இரத்தினமும் வெள்ளவத்தை கடற்கரையோரம் ஒன்றாக சுத்தி வந்தது இன்றும் எனது மனதில் பசுமையாக நிழலாடுகின்றது. என்னை நீங்கள் அன்புடன் அடிக்கடி கரன் கரன் என்ற கூப்பிடுவீர்கள் ஆனால் இன்று கரன் கரன் என்று கூப்பிட்ட அதே குரல் மீண்டும் என் காதில் கேட்காதோ என்று எனது மனம் ஏங்குகிறது.

நீங்கள் இப்பூவுலகில் செய்த தாணதரும புண்ணிய பலன்களினால் பிறவித்தளையிலிருந்து நீங்கி இறைவனது பாதத்தை அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் பிரிவால் வாடும்

**ந. சிவகரண்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தி

திருவாளர் பொன்னுத்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய அவரின் பிறந்த ஊரின் குலதெய்வமான கவுனாவத்தை வைரவரையும் புகுந்த ஊரின் குல தெய்வமான பெரும்பரப்பு விநாயகரையும் பிரார்த்தித்து அவரின் உள்ளார்ந்த உறவினரான திருமதி அருமைநாயகம் இம்மடலை விக்னேஸ், பகீரதியின் மனம் சாந்தி பெறவேண்டி எனது ஆழ்ந்த அனுதாபத்தை அறியத்தருகிறேன்.

பொன்னுத்துரை எனது சகோதரர் பொன்மயிலைநாதனின் மனைவி புவனேஸ்வரியின் அண்ணன். எனது கணவர் அருமைநாயகத்தின் தங்கையின் கணவர் கனகசபையின் தம்பி. சிறுவயது முதல் என்னுடன் ஒன்றாய் பழகி, ஒன்றாய் விளையாடி, ஒன்றாய் பள்ளிக்கூடம் போன என் உடன் பிறவா சகோதரி (இளையக்கா) நகுலேஸ்வரின் அன்புக் கணவர். எங்கள் மூவருக்கும் அதாவது எனக்கு, எனது தம்பிக்கு, எனது கணவருக்கு, எல்லோருக்கும் மைத்துணர் என்ற பெருமைக்குரியவர்.

அழகே உருவான நகுலேஸ்வரி எனும் எனது இளையக்காவை விவாகம் செய்த பின் பக்கத்து வீட்டில் மயிலிட்டியில் இவரது இல்லறம் ஆரம்பமானது. விதி வசத்தால் மிகவும் குறுகிய காலத்தில் இல்லற வாழ்வை இழக்க நேரிட்டது. மழலைப் பருவத்தில் இரு குழந்தைகள் தாயை இழந்தனர். அந்த மழலை செல்வங்களுக்கு அவர் தாயாகவும் தந்தையாகவும் இருந்து பராமரித்து, தானுண்டு, தன்னுடைய கடமையுண்டு என வாழ்ந்து பிள்ளைகள் இருவரையும் வாழ்வாங்கு வாழவைத்து ஆளாக்கிய பெருமைக்கும் மதிப்புக்கும் உரியவர்.

பக்கத்து வீடென்றபடியால் மயிலிட்டி வீட்டில் எனது தாயார் இருக்கும் வரை நிறைய தொடர்பு இருந்தது. எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்குடையவர். எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது எழுபதாம் ஆண்டளவில் நாங்கள் குடும்பமாக மயிலிட்டியில் இருந்த எனது வயது முதிர்ந்த தாயாரை பார்க்க கொழும்பில் இருந்து யாழ்தேவியில் பகல் 2 மணிக்கு புறப்பட்டோம். போகும் போது எனக்கு Asthma (ஆஸ்துமா) சிறிது இருந்தது அதை பொருட்படுத்தாமல் பயணம் தொடங்கி கடைசி ஸ்டேசன் காங்கேசன்துறையில் இறங்கிய போது எனக்கு Asthma கூடிவிட்டது. இரவு 11 மணியாகி விட்டது வீடு செல்ல பயணக்களைப்பால் எனக்கு யுளவாஅய கூடிவிட்டது. இரவு நித்திரை இல்லை ஒரே இழுப்பு. இரவு 3 மணிக்கு பொன்னுத்துரை துவிச்சக்கரவண்டியில் சென்று எங்கள் குடும்ப டாக்டரை கூட்டி வந்தார், டாக்டர் ஊசி போட்டு மருந்து தந்தார். எவ்வளவோ சுகமாக இருந்தது. அந்த நேரம் அந்த இரவில் பொன்னுத்துரை செய்த உதவி எனக்கு அவ்வளவு சுகத்தையும் மனநிறைவையும் தந்தது என்பதை

"உதவி வரைத்தன் றுதவி உதவி செய்யப்பட்டார் சார்பின் வரைத்து" எனும் குறள் மூலம் அறியலாம்.

ஆவர் 82ஆம் வயது வரை அதுவும் தனது இறுதிக் காலத்தில் ஊரில் இருந்து கஸ்டப்படாமல், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து உறவாடி மகிழ்ந்து இறைவன் திருவடி நிழலை அடைந்துள்ளார். அவர் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி சாந்தி

நெடுதல் உள்ளொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ்வுலகு

**திருமதி பத்மாவதி அருமைநாயகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்கள்
## வாழ்வுசீர் பரவல்

ஈழமணித் திருநாட்டின் வடபால் கீரிமலை, மாவிட்டபுரம் என்னும் புனித தலங்களின் பராமரிப்புடன் தொடர்புபட்டு ஒளிருங் கிராமங்களுள் கருகம்பனையும் ஒன்று. இந்தப் புனித பூமியில் சுப்பிரமணியம் என்னும் புண்ணியவானின் புதல்வராகத் தோற்றியவர் பொன்னுத்துரை. அவர் அன்புக்கொரு அண்ணனாகக், கிராம சேவகராகப் பணியாற்றிய கனகசபையும், ஆசைக்கொரு தங்கையாகப் புவனேஸ்வரியையும் அருமைத் தம்பியாக இரத்தினம் குமரேஸ்வரன் என்போரையும் பெற்றிருந்தார்.

"தக்கார் தழுவிய ரென்ப தவருவர் செந்தாற் காணப்படும்"

எனுங் குறள் விதத்தின் படி இவர் பிள்ளைகள் பகீரதி, விக்னேஸ்வரன் என்போர் சமூகத்தின் மதிப்பார்ந்த உறுப்பினர்களாக இங்கிலாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இறுதிக்காலத்தில் பிள்ளைகளின் அரவணைப்புடன் இருந்துவந்தவர் இவர். அமரத்துவம் எய்தியுள்ளார் அதுவே அவரது பெரும்பேறு எனக் கொள்ளலாம்.

பண்பு நிறைந்தவரான விவசாயி சுப்பிரமணியத்தின் புதல்வனாக உதித்த பொன்னுத்துரையும் மதிப்பார்ந்த விவசாயியாக வாழ்ந்தவர். அவர் தமது கல்வியை இளவாலை வடக்கு மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்தவர். மக்களுடன் மக்களாகிச் சேர்ந்து வாழும் கொள்கையில் நாட்டம் கொண்ட பொன்னுத்துரை தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுத் துறையினருடன் இணைந்து மக்கள் சேவையில் ஒரு அங்கத்தவராய் இவர் அதன் பல கிளை அமைப்புக்களில் இயங்கிய பண்டக சாலைகளின் மனேஜர் பதவியைப் பொறுப்பேற்று நல்ல வகையில் நடத்திப் பொது மக்களின் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளார். அப்பாவின் நீதியான, நிலையான வாழ்க்கை முறை இன்று பிள்ளைகளிடம் பிரதிபலிப்பதைப் பார்க்க முடிகின்றது.

மயிலிட்டியில் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்து கொண்ட பொன்னுத்துரை அங்கேயே வாழ்க்கையையும் தொடர்ந்தார். அவர்கள் வீட்டிற்கு அண்மையாகத்தான் மயிலிட்டிக் கலைமகள் மகாவித்தியாலயம் அமைந்துள்ளது. அவர் பிள்ளைகள் அங்கேதான் கல்வி பயின்ற பின் இந்தக் கல்வி நிலைய வளர்ச்சியிலே மிக மனநிறைவுடன் ஈடுபாடுடையவராக இருந்தார் பொன்னுத்துரை. இவர் அந்த வித்தியாலத்தைப் பொறுப்பேற்று நடத்திய காலத்தில் எமது வலது கையாகி உதவியவர் என்பது குறிப்பிடக் கூடியது.

தெய்வ நம்பிக்கை நிறைவாக உடைய பொன்னுத்துரை மாவிட்டபுரம் முருகன் ஆலயம் கீரிமலை நகுலேஸ்வரன் ஆலயம் கருகம்பளை கவுணகவத்தை வயிரவர் ஆலயம் என்பவற்றின் திருப்பணி வேலைகளுக்கான தேவைகளுக்காகத் தம்மால் முடிந்த உதவியைக் காலத்திற்கு காலம் கொடுத்துள்ளார். கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அமைப்பிற்காக அவரது நிலத்தையே உபகரித்தவர். ஆலயக் கிரியைகளின் சில இவரது பொறுப்பிலேயே நடந்து கொண்டிருந்தன என்பது குறிப்பிடக்கூடியது.

இப்படிப்பட்ட பெருமை படைத்த பொன்னுத்துரை அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன் சமத்துவம் எய்தினார் என்னும் செய்தியியை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் குடும்ப உறுப்பினர்கள் எல்லோருக்கும் எமது அனுதாபங்கள் உரியனதாகுக.

**சி. அப்புத்துரை**
**முன்னைநாள் அதிபர்**
**மயிலிட்டிக் கலைமகள் வித்தியாலயம்**
**காங்கேசன்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனாவின் முன்னாள் அதிபர் திரு கனகசபாபதி அவர்களின் அனுதாபச்செய்தி

மகாஜனா ஒரு கிராமத்துப் பாடசாலையாயிருப்பதில் பல அனுகூலங்கள் உண்டென்றாலும் பிரதானமானது அதன் சுற்றாடலில் வாழ்கின்ற மக்கள் தான். நகரத்துப் பாடசாலை என்றால் அங்கே கல்வி கற்போர் குடும்ப வரிசை ஒரு தலைமுறையுடன் பெரும்பாலும் நின்று விடும். ஆனால் ஒரு கிராமத்தினைப் பொறுத்தமட்டிலே ஒரு தலைமுறையல்ல பல தலைமுறைகள் தொடர்ச்சியாக அப்பாடசாலையின் பழைய மாணவர்களாகத் தான் இருப்பார்கள். இதனால் பாடசாலை மீது ஏற்படும் விசுவாசம், பந்தம் அவரவர்களின் இரத்தத்திலேயே கரைந்திருப்பதை உணர முடியும்.

மகாஜனாவைப் பொறுத்தமட்டிலே அதன் சுற்றாடல் கிராமங்களான அளவெட்டி, பன்னாலை, கொல்லங்கலட்டி, கருகம்பானை, தெல்லிப்பழை, கட்டுவன், குரும்பசிட்டி ஆகியன மகாஜனா தத்தெடுத்த கிராமங்கள். மகாஜனாவினை ஊட்டி வளர்த்த கிராமங்கள். பாடசாலையின் வளர்ச்சியிலும் அதன் முன்னேற்றத்திலும் அதீத கவனத்தை சுற்றாடல் மக்கள் எடுத்தனர். இதனால் பாடசாலை வளர முடிந்தது. மாணவர்கள் கல்வித்தரம் உயர்ந்தது. பேரும் புகழும் வந்தது.

பொன்னுத்துரை சுப்பிரமணியத்தின் குடும்பமும் இந்த விதிக்கு அமைந்த நெறிமுறையிலேயே வாழ்ந்து வந்தது. பொன்னுத்துரை சுப்பிரமணியம் கருகம்பானையில் பிறந்தவர் மைலிட்டியில் பெண் கொண்டவர். அவரது மனைவியார் நாகேஸ்வரியுடன் மைலிட்டியில் வாழ்ந்தாலும் மகாஜனாவினுடைய உறவைப் பேணி நிற்கவே விரும்பினார். அந்தக்கல்லூரியின் சைவப் பாரம்பரியத்தில் தான் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதில் தீவிர நம்பிக்கை வைத்தவர் அமரர் பொன்னத்துரை சுப்பிரமணியம் அவர்கள். இதன் காரணமாக மகன் விக்னேஸ்வரன் மகள் பகீரதி ஆகிய இருவரையும் மகாஜனாவிலேயே கல்வி கற்பதற்கு வழிவகுத்தார். பாடசாலைக் கல்வி முடியும் வரை அவர்கள் இருவரும் அங்கேயே கல்விகற்றனர்.

விக்னேஸ்வரன், பகீரதி , இருவருமே பாடசாலையில் கல்வியில் மாத்திரமல்லாது புற நிகழ்ச்சிகளிலும் மிகையான பற்றுதலுடன் பணியாற்றி ஆசிரியர்களினதும் சக மாணவர்களினதும் அபிமானத்தினைப் பெற்றார்கள் என்றமையால் பாடசாலையில் மாணவர்களுக்கான உயர் பதவியான மாணவர் தலைவர் பதவிகளையும் ஈட்டினர். அப்பதவிகளையும் கௌரவத்துடன் கையாண்டமையால் பதவிக்கே பெருமை தேடித் தந்தனர். திரு. விக்னேஸ்வரன் புலம் பெயர்ந்து இங்கிலாந்தில் வாழ்கின்ற போதும் அங்கேயும் அதே ஈடுபாட்டுடன் பாடசாலைக்குச் சேவிக்க வேண்டும் என்ற ஆசையின் நிமித்தமாக இங்கிலாந்துப் பழையமாணவர் சங்கத்தில் இணைந்து அதன் உப பொருளாளராகவும் சிறப்புறப் பணியாற்றுகிறார்.

திரு. பொன்னுத்துரை சுப்பிரமணியம் அவர்கள் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிய பின்னர் தனது பிள்ளைகளுடன் வாழும் பொருட்டு இங்கிலாந்து புகுந்து தனது முதுமைக் காலத்தினைப் பிள்ளைகள் பேரப் பிள்ளைகளுடனும் இனிதே கழித்துள்ளார்.

குடும்பத்துப் பெரியவர் ஒருவரின் மறைவு குடும்பத்தினைப் பொறுத்த மட்டிலே பேரிழப்பு என்பதை மறுப்பதற்கில்லை. அவரது அனுபவங்கள், அறிவுரைகள் எத்தனை அவசியமானவை, வழிகாட்டவல்லவை என்பதை ஒவ்வொரு சந்தரப்பத்திலும் குடும்பத்தவர்கள் உணர்வார்கள். அப்போது அவரின் பிரிவு தாங்க முடியாததாகவே இருக்கும். மறுபுறத்தில் பார்ப்போமாயின் அப்பெரியவர் வாழக்கையில் சகலசுகங்களையும் அனுபவித்துள்ளார். நோய் நொடியில் உழன்று அவருக்கும் சுற்றத்தாருக்கும் வசதிக்குறைவினை ஏற்படுத்தாது எவ்வித கஷ்டமும் பெரிதளவில் அனுபவிக்காமல் மறைந்ததை ஒட்டி நாம் நமது கவலையைப் போக்கிக்க முனையலாம்.

அனரது ஆத்மா சாந்தியடையட்டும்.

பொ. கனகசபாபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
Mahajana College, Tellippalai
Old Students Association - United Kingdom
பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம்
**Proud to be a Mahajanan**
Est. 1987





EXECUTIVE COMMITTEE

PRESIDENT
Mr A.Wimalathasan
awimal@yahoo.com
44 (0)73 0156 8925

VICE PRESIDENT
Mrs (Dr) Theva Nathan

SECRETARY
Mr R T Sambanthan
rasaiah@btinternet.com
44 (0)79 3921 2952

ASSISTANT SECRETARY
Mr N Ravindran

TREASURER
Mr V Thavamuruganathan
Ashni23@aol.com
44 (0)77 6166 6424

ASSISTANT TREASURER
Mr P Vigneswaran

SPORTS SECRETARY
Mr V.Shanmugarajah

CULTURAL SECRETARY
Mr S Kanesalingam

COMMITTEE MEMBERS
Mr Arul Thavasingam
Mr G Balakulendran
Mr K S Balakumar
Mr V Balasubramaniam
Mr B Buvanendra
Mr N Guganesan
Dr K Jayanthan
Mr K Jeyavarathan
Mr S Kugananthan
Dr K Kularajan
Mr T Kumaran
Mr S Ramachandran
Mr V R Ramanathan
Ms A Selvarajah
Dr S Sivakumar
Mr V Sivanandarajah
Mr V Sivathas
Mr N Sri Sabesan
Mr S Vasanthakumar

CO-OPT MEMBERS
Mrs Bama Maheswaran
Mr K S Sharveswaran
Mr S Selvagunachandran
Mr N Sri Gengatharan

PATRONS
Mrs R Jeyaratnam
Mr G Natkunam
Dr S Navaratnam
Mr A Vairavamoorthy
Mr P Yogeswaran



CORRESPONDENCE
The Secretary
34 Donington Avenue Ilford,
Essex. IG6 1DP UK
www.mahajana.co.uk
info@mahajana.co.uk



## அமரர் திரு சுப்பிரமணியம் பொன்னுத்துரை

எமது கல்லூரியின் அயல் கிராமத்தை சேர்ந்த ஒருவரின் மறைவு எமக்கு மிகவும் கவலைத் தருகிறது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு கால வரலாற்றில் தங்களின் பல்வேறு பங்களிப்பினால் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்கள் பலர். மறைந்த திரு சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்கள் மகாஜனக் கல்லூரிக்கு ஆதரவு வழங்கியது மட்டுமல்லாமல், தொடர்ந்து கல்லூரின் நடவடிக்கைகளில் மிக உற்சாகத்துடன் பங்குபற்றியவர். அவர்கள் இலங்கையில் இருக்கும் வரை அவ்வப்போது கல்லூரியின் தேவையறிந்து தன்னால் இயன்ற வரை கல்லூரிக்கு தொண்டாற்றியவர்.

திரு சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்களின் மறைவால் துயருறுகின்ற அவருடைய பிள்ளைகள், குடும்பத்தினர்க்கு எமது சங்கத்தினதும் மகாஜனக் கல்லூரிச் சமூகத்தினதும் அநுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்
01-10-2009

வெல்லுக மகாஜன மாதா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கேற்ப, தன் வாழ்விற்கே இலக்கணம் வகுத்து அதன் வழியே வாழ்ந்து காட்டியவர் அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்கள்.

அவருக்கும் எனக்கும் அறிமுகமாகி ஏறத்தாழ முப்பத்திரண்டு வருடங்களாகின்றன. அவரை நான் அறிந்த நாள் முதல் ஏற்பட்ட வியப்பு இன்றும் என் மனதில் சற்றும் மாறுபடாது அப்படியே நிலைத்துநிற்கின்றது.

இவரது மகள் பகீரதியும் நானும் சிறுவயது முதல் சினேகிதிகள் அத்துடன் விக்கியும், நானும் க.பொ.த உயர்தர பாடங்களில் ஒன்றாக கல்வி கற்றிருக்கின்றோம்.. அப்போது அவர்கள் இருவரும் தங்கள் தந்தையைப் பற்றி மிகவும் பெருமையாக கூறுவார்கள்.

தன் மகள் பிறந்தநாள் முதல் இவரது மனைவி பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டிருந்திருக்கின்றார். தன்னிரு சிறு குழந்தைகளுடனும், தன் நோய்வாய்ப்பட்ட மனைவியை கண்ணும்கருத்துமாய் கவனித்து வந்திருந்தார். தன் மனைவி காலமானதன் பின்னும் தன் மக்களுக்காகவே வாழ்ந்து தன் வாழ்வையே தியாகம் செய்த பெருந்தகை இவர். தான் பெற்ற பிள்ளைகளின் உயர்விற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து, அவர்களை சமுதாயத்தில் முன்னிலையில் வைத்தவர். அவர் மக்களும் அவர்மேல் பேரன்பு கொண்டவர்களாக இருந்தார்கள். அவர் முதுமை அடைந்த போது அவரை தனியே இருக்கவிடாமல் தங்களுடனேயே வைத்து பாதுகாத்தனர். இத்தகைய வாழ்வு எல்லோருக்குமே அமைவதில்லை. அவர் இன்று நம்முடன் இல்லை. எனினும் அவர் தம் மக்கள் மனதிலும் மற்றவர் நினைவிலும் நீங்காது நிலையாக வாழ்வார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**வாசுகி சிறிதரன்**

**சட்டன் தமிழ்ப்பாடசாலை**

**Manor Park Primary School, Greyhound Road, Suhon, SMI4AW**

## "வாழ்வாங்கு வாழ்ந்தவர்"

எண்பத்திரண்டு வயதை எட்டிய ஒருவரின் இறப்பு, இடைக்காலத்தில் பழகிய எமக்கே வருத்தம் தருகிறது. என்பதே அவர் வாழ்வியல் சிறப்புக்கு ஒரு சான்று.

நிமிர்ந்த நெடும் தோற்றம். சிவந்த நிறம். வெள்ளைவேறேல் என்ற தேசம். எவருக்கும் எதற்கும் தொந்தரவில்லாத இயல்பு. தாய்மண் நோக்கி தான் எப்போ மீள்வேன் என்ற ஏக்கம். பிறந்த கருகம்பானை மண்மீதும், புகுந்த ஆதி மயிலிட்டி ஊர்மீதும், ஆறாத மோகம். வானொலி செய்திகளைக் கேட்பதிலும், வரி தவறாமல் வரும் புதினத்தாள்களை வாசிப்பதிலும் ஆர்வம். உறவுகளை இடையிடையே சந்தித்து உரையாடி குலாவி மகிழ்வதிலே உற்சாகம். பிள்ளைகளை ஆளாக்க மனைவியின் பிரிவின் பின்பும், தாயின் பாசத்தையும் ஏற்று தனியனாக நின்று புரிந்த அயராத உழைப்பு. இவை எல்லாம் சாதனைகள் படைத்த அந்த சாதாரண மனிதனை வியர்ப்போடு நினைக்க வைக்கின்றன.

மகன் விக்கி, மருமகள் நிம்மி ஆகியோர் சட்டன் தமிழ்ப் பாடசாலையின் பிறப்பிலும் மழலைப் பருவத்து சிரமம்மிகுந்த வளர்ப்பிலும் காட்டிய அளப்பரிய அக்கறை மறக்கமுடியாதது. மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் முதலாக எங்கும் பொது சேவை ஈடுபாட்டை தன் சந்ததிக்கும் தந்து சென்ற அந்தத் தந்தையின் ஆத்ம அஞ்சலிக்கு பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர், பெற்றோர், அனைவரும் இணைந்து பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம் சார்பாக **ப.வை.ஜெயபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிய மனையாளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1964ம் ஆண்டு சகோதரியின் திருமணத்தின்போது மனைவி, மகன், மாமன், சகோதரர்கள், மைத்துனர்கள் மற்றும் உறவினர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. சுப்பிரமணியம் பெ

தண்டிகைக் க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யம் பொன்னுத்துரை அவர்களின் வம்சாவழி

...டிகைக் கனகராய முதலிமரபு

வேல் உடையார்
சங்கரநாதர்
முத்தநாச்சன்
வன்னித்தமபி
சுப்பிரமணியம்
வயிரவநாச்சன்

இளையபிள்ளை
பொன்னம்பலம்

கதிரித்தம்பி
வள்ளிப்பிள்ளை

வைத்திலிங்கம்
தெய்வானைப்பிள்ளை

தங்கப்பிள்ளை
சங்கரப்பிள்ளை.

சப்பிரமணியம்
தங்கமுத்துப்பிள்ளை

சுப்பிரமணியம்
மசமாங்கம்

சங்கரப்பிள்ளை
பரமேஸ்வரி

காசிப்பிள்ளை

சபாநாயகம்
வள்ளிப்பிள்ளை

பராசக்தி
கந்தையா

செல்வநாயகி

நகுலாம்பிகை

நீலாம்பிகை
விசுவநாதன்

கதிர்காமநாதன்
நாகம்மா

அருள்மாறன்
அருள்செல்வி

தயாபரநாதன்

ஈஸ்வரநாதன்
தாரணி

ஈஸ்வரிதேவி
கிருஸ்ணமூர்த்தி

பொன்னம்பலம்
கமலேஸ்வரி

பிரசாந்தன்

கந்தையா
பராசத்தி

சின்னத்தங்கம்
தம்பி

நடராசா

விசுவநாதன்
நீலாம்பிகை

அன்னலட்சுமி

நிர்மலாதேவி
சிவகுமாரன்

செந்தூரன்
செந்தீபன்
லக்ஷியா

சண்முகரத்தினம்
புவனராணி

லக்சன்
சிந்துஷா

சந்திரபாலன்
விஜயலட்சுமி

சஞ்சீவன்
றோஷானி

திருநாவுக்கரசு
சிவானந்தி

அனோஜன்
தாரணி
தரன்கா

பத்மாவதி
அருமைநாயகம்

மணிவண்ணன்
இந்திரா

கருணாவதி

சாமினி
ஜெயக்குமார்

மாதங்கி
நவநீதன்

பொன்மயிலைநாதன்
புவனேஸ்வரி

நந்தகுமார்
தனுஷா

ஆர்சி

அருணகிரிநாதன்
விமலா

திருப்பரங்கிரிநாதன்
ரதி

திருத்தணிகைநாதன்
ஜெயமாலா

சங்கரநாதன்
தரணிகா

செந்தில்நாதன்
சுகந்தி

தருணிகா

நரேந்திரநாதன்
நர்மதா

நதிஷா

சிவலோகநாதன்
தில்லைநாயகி

கிசோர்
டினா

சைலஜூரி

சுசிலாதேவி
நெல்லைலிங்கம்

சகுந்தலா
பிரபாகர்

யதுஷ்

சோதிலிங்கம்

பத்மநாதன்
சசிகலா

பரிதினி
கிருஷ்ணகுமார்

ருக்ஷன்

தர்மினி

ரேணுகா

கமலர்தேவி
சுந்தரமூர்த்தி

மலைமகள்
பஞ்சலிங்கம்

தரணிதரன்
ஜெயந்தினி

திருமால்
நவராணி

கார்த்திகன்
சுஜனி
சுஜினா

பத்மராணி
கிருபாலிங்கம்

சுதர்சன்
டிவாகரி

கரிசன்
தர்ஷன்
கைலேசன்

சுகர்ணன்
மாயா

சுகிர்தா
யோகநாதன்

அனுக்ஷா

ரஞ்சிதநாதன்
தேவகி

கௌமாறன்

ஞானபுஸ்பம்
ரவி


ரோகாஸ்
தர்சன்

ரஞ்சினி
ஜெயேந்திரன்

விதுரா
சிஷாந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பொன்னுத்துரையின் தந்தை, தாய் வழி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்களின் மனைவி தாய்வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்களின் மனைவி தந்தை வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனிமரமாய் வளர்த்திட்ட பல விருச்சங்கள்



லண்டன்மாநகரிலும் ஆன்மீகவாழ்வில் அதிஈடுபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்புடையீர்,

எங்கள் அன்புத் தெய்வம் அமரர் திரு. சுப்பிரமணியம் பொன்னுத்துரை அவர்கள் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியிலிருந்த வேளை அவரை வந்து பார்த்தோருக்கும், அவர் மறைந்த செய்தி கேட்டு வருகை தந்து எமது துயரிற் கலந்து ஆறுதல் தேறுதல் கூறியோருக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் வாயிலாக அனுதாபச் செய்திகள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கட்கும், இரங்கலுரைகள் அனுப்பிவைத்தோர், ஈமக்கிரியைகளில் கலந்து சிறப்பித்தோர், மலர்வளையங்கள் சாத்தினோர், இரங்கலுரை நிகழ்த்தினோருக்கும், ஈமக்கிரியைகள் சிறப்பே நடைபெற முன்னின்று உதவியும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டும் சிறப்பித்த ஐக்கிய இராச்சிய சைவ முன்னேற்ற சங்கத்தினருக்கும் இம்மலரை சிறப்பே வெளியிட உதவிய Net Printers அச்சகத்தாருக்கும், மேலும் பலவழிகளில் உதவிய சகலருக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள்

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




NET PRINTERS - ஹுாசியம். 0208 265 0219
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org